# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.117/2017** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா– 09 ( PW– 09 )** |
| **பெயர்** | :– | **அருண்குமார்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **ராஜசேகர்** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 15 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் தருமபுரி மாவட்டம், அழகாபுரம், மாவட்ட ஆட்சியரகத்தின் அருகில் உள்ளேன். இறந்துபோன இளமுருகன் என் அக்காவின் கணவர். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரியை தெரியாது. இந்த வழக்கு நிகழ்வு குறித்து எனக்குத் எதுவும் தெரியாது. காவல் துறையினர் என்னை விசாரிக்க - வில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

கொலையுண்ட இளமுருகன் என் அக்காவின் கணவர். அவர் மகிழுந்துகளை வாங்கி விற்கும் தொழில் செய்துவந்தார். பல குற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தார் என்றும் அவர்மீது கொலை வழக்குகள் நிலுவையில் இருப்பதாலும் மேலும் மேட்டூரில் ஒருவரை கொலைசெய்த காரணத்தினால் கொலையானவர்க்கு வேண்டியவர்கள் என்மாமாவை கொலை செய்துவிடுவதாக மிரட்டி வருவதாக என் அக்காவிடம் கூறியதை அவர் என்னிடம் கூற நான் தெரிந்துக்கொண்டேன் என்றும் பின்னிட்டு சேலம் மாநகரம் மூன்று சாலை அருகில் ஜென் கார் பட்டறை அருகே எனது மாமாவை மேட்டூரை சார்ந்த எதிரிகள் தலை, கழுத்து, கை ஆகிய இடங்களில் வெட்டியதாகவும் அங்கேயே தலை குப்பரவிழுந்து இறந்துபோய்விட்டதாகவும் காவல் துறை விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.